Auroville Education : 1

# ஆரோவில்

## ஸ்ரீ அரவிந்தர் - ஸ்ரீ அன்னை

**Auroville Education: 1**

# ஆரோவில் - ஸ்ரீ அரவிந்தர் - ஸ்ரீ அன்னை

(ஸ்ரீ அரவிந்தர் நூல்களைத் தழுவித் தொகுக்கப்பட்டவை)

Published by:
Auroville Education, Cultural Research Dept., 1972

# ஆரோவில் — ஸ்ரீ அரவிந்தர் — ஸ்ரீ அன்னை

வரலாற்றுப் பெருமை மிக்க பாண்டிச்சேரிக்கு ஐந்து மைல் தூரத்தில் ஆரோவில் என்னும் உலக மாநகரம் ஒன்றை 1968ம் வருடத்திலிருந்து ஸ்ரீ அரவிந்தர் ஆஸ்ரமத்து அன்னை நிர்மாணித்து வருகிருர். உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் இளைஞர்கள் தம் நாட்டு வளமான மண்ணைச் சுமந்து ஆரோவில் மாநகர அஸ்திவாரத்தில் இட்டனர். உருவாகும் உலகப்பொது நகரமான ஆரோவில் மூலமாக உலக மக்கள் அனைவரும் ஒருவாறு ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை இவர்களைப்பற்றியும் ஆஸ்ரமம் பற்றியும் அறிவார்கள். உலகளவில் தம் லட்சியங்களைச் செயலில் நிறைவேற்றிய ஸ்ரீ அரவிந்தருக்கும் நிறைவேற்றிக்கொண்டு வருகிற ஸ்ரீ அன்னைக்கும் அன்பும் பக்தியும் செலுத்தி அவர்கள் காண்பித்துள்ள உண்மை, அன்பு, அறிவு, இன்பம் சேர்ந்த வாழ்க்கை முறைகளைப் பின்பற்றப் பலர் ஆரம்பித்துள்ளனர்.

ஸ்ரீ அரவிந்தரின் 100-வது பிறந்த தினம் 15-8-1972ல் வருகிறது. எனவே உலக மக்கள் தம் உள்ளத்து ஆர்வமும் மகிழ்ச்சியும் நன்றியும் மகான் அரவிந்தருக்குத் தெரிவித்துக்கொள்ளும் நல்லாண்டு 1972 ஆக அமையும். ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ என்னும் தமிழ் அறிவுரைப்படி மனிதகுலம் ஒன்றே என்றும் எல்லா நாட்டு மக்களும் நம் சுற்றத்தார்களே, உறவினர்களே, ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சகோதரர்களே என்றும் எல்லா நாடுகளும் நம் ஊரே என்றும் ஆரோவில் எல்லா நாடுகளுக்கும் உரியதே என்றும் உணர்ந்து எந்நாட்டவருக்கும் ஆரோவில் போற்றி

என்று வாழ்த்தி, இவ்வுலக மாநகரின் குடிமக்கள் வாழ்வார்கள். இப்பெரும் நகரம் தென்னாட்டில், தமிழகத்தில் அமையப் பெறுவது நம் முன்னோர்களின் தவப்பயனே யாகும்.

ஆரோவில் பற்றி ஸ்ரீ அன்னை பின்வருமாறு விளக்கி யிருக்கிறார். "ஆரோவில் உலகப் பொது நகரமாக வளர விரும்புகிறது. அதில் எல்லா நாட்டுமக்கள் ஆண்களும் பெண்களும்—மதம் அரசியல், தேசம் ஆகிய பற்றுகளை யெல்லாம் விட்டு மேன்மேலும் இசைவாக இணைந்து அமைதியுடன் நலம்பெற வாழமுடியும். மனித குலம் ஒன்றே என்னும் லட்சியத்தை அடைவதே ஆரோவில் நகரத்தின் கருத்தாகும்." "உயரிய முன்னேற்றகரமான கூட்டுச் சமுதாய வாழ்வு முறை உலகெங்கும் அமைக்க விரும்புவர்களுக்கு ஆரோவில் முன் மாதிரியாக விளங்கும். மனித வாழ்வின் எல்லா அம்சங்களையும் தெய்வீக மாக மாற்றி உருமாற்றம் செய்ய (transformation) அதாவது மனம் - உயிர் - உடல் ஆகியவற்றை தெய்வீக மாக மாற்றுவதற்கு முயற்சி செய்யும். உலகத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்து, ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை ஆகியோரின் லட்சியங்களைப் பின்பற்றி வாழத் தயாராயுள்ள மக்கள் அனைவரும் சேர்ந்து வாழ ஆரோவில் அனுமதிக்கும்".

இந்நகரம் தொழிற்பகுதி, குடிவாழ்வுப் பகுதி, கலாசாரப் பண்பாட்டு நலப்பகுதி, சர்வதேச உறவு நலப் பகுதி என நான்கு பிரிவுகளாக அமையும். ஐக்கிய நாட்டுச் சபையைச் சேர்ந்த யூனெஸ்கோ (UNESCO) நிறுவனம் ஆரோவில் நகரத் திட்டத்தை வரவேற்று

எல்லா நாட்டவரும் ஒரு சமுதாயமாக வாழவும் கல்வி, விஞ்ஞானம், பண்பாடு, கலை இன்னும் மற்ற துறைகளிலும் ஈடுபட்டு வாழவும் ஒவ்வொரு நாடும் அதனதன் நாகரீகத்தையும் கலாசாரப்பண்பாட்டையும் விளக்கும் தனிச் சிறப்பான கலைக் கூடங்களையும் மாளிகைகளையும் நிறுவவும் அழைத்திருக்கிறது. அதுபோலவே இந்திய நாட்டின் எல்லா மாவட்டங்களின் சிறப்பான கலாசார வாழ்வைச் சித்தரிக்கும் பொருட்காட்சிகள் அதற்கு ஏற்ற அழகு மாளிகைகளில் அமையப்பெறும். இவைகள் எல்லாம் நகரின் சர்வதேச உறவு நலப் பகுதியில் அமையும்.

நகரின் கலாசாரப் பகுதியில் சர்வதேசச் சர்வகலா சாலையும், எல்லாக் கலைகளும் கலைக்கூடங்களும் காட்சிக்கூடங்களும், உடற்பயிற்சிகளும் விளையாட்டு மைதானங்களும் சர்வதேச விளையாட்டு அரங்கமும் இடம்பெறும். தொழிற் பகுதியில் எல்லாவிதத் தொழில்களும் தொழிற் பேட்டைகளும் வியாபாரங்களும் சர்வ தேச வியாபார மண்டியும் விவசாயம் பால் பண்ணை பழத் தோட்டங்கள் ஆகியவையும் இடம்பெறும். ஆனுல் போட்டியும் பொருமையும் இடம் பெருது. மாருக, நல்லெண்ணமும் கூட்டு ஒத்துழைப்பும் வளரும். இங்கு வேலையும் தொழிலும் செய்வது பிழைப்பு தேடுவதற்காகவோ பணம் சம்பாதிப்பதற்காகவோ அல்ல; ஆனுல் ஒருவன் வாழ்வில் தனக்கிருக்கும் ஆக்க நல சக்திகளும் திறமைகளும் விளக்கமுற வெளிப்படுத்துவதற்கும்,இனி சாத்தியப்படும் சக்திகளையும் திறமைகளையும் மலர்வு பெற வளர்த்துப் பயன்படுத்துவதற்காகவுமே. எனினும் சமுதாயத்திற்குத் தான் உழைப்பதால் சமுதாயமும் கைம்மாருக அவன்

பிழைப்புக்கு ஊதியமும் உழைப்புககுத் தொழிலும் கொடுக்க வகை செய்யும். முதலாளி—தொழிலாளி என்ற உறவு முறை இங்கு இருப்பதற்கில்லை. ஆரம்பத்தில் ஆரோவில் நகர வாழ்வின் ஒருமை லட்சியத்தை ஏற்காவிட்டாலும், நல்லெண்ணமும் உண்மையுழைப்பும் நல்லொழுக்கமும் உள்ள சிறந்த தொழிலாளர்கள் அங்கு அனுமதிக்கப்படுவர். அவர்கள் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் வாழ்வார்கள். வாழ்க்கை வசதிகளுக்கு வேண்டிய சுத்தமான வீடுகள், பொது உணவு விடுதிகள், விளையாட்டு மைதானங்கள், பள்ளிக் கூடங்கள், தொழிற்பயிற்சிச் சாலைகள், ஆஸ்பத்திரிகள், குடும்பக்கட்டுப்பாடு விடுதிகள், வேலை நேரங்களில் குழந்தைகள் தங்கும் விடுதிகள் முதலிய எல்லாம் அமைக்கப்பெறும். தங்கள் இயல்புக்கும் சக்திக்கும் தகுந்தவாறு வேலைகளை எடுத்துக்கொள்ளலாம். அவற்றில் பயிற்சி அளிக்கப்படுவர்; நகரின் பொருளாதார வசதிகள் அதிகரிக்கும்போது அவர்களின் அடிப்படைத் தேவைகள் எல்லாம் பூர்த்தி செய்யப்படும். அந்நிலையில் சம்பள ஊதிய முறைகள் போய் முதலாளி - தொழிலாளி உறவு முறைகளும் நீங்கி தொழிலாளர்கள் எல்லாம் நகரின் பெரும் குடும்பத்தினராக, பொது அங்கத்தினராக, ஆகிவிடுவர்.

நகரின் மத்தியில் ஒரு அழகான தடாகத்தின் நடுவில் ''மாத்ருமந்திர்'' எனும் கோவில் அமையப்பெறும். இது சமயசார்பற்றதாக இருக்கும். குடி இருப்புப் பகுதியில் மனித குல ஒருமையை லட்சியமாக ஏற்றுக் கொள்பவர்கள் ''ஒருலக மக்களாக'' வாழ்வர். அழகுக்கலை நிரம்பிய பலவகைக் கட்டிட அமைப்புகள், வீடுகள்,

தனி அறைகள் மாளிகைகள், தோட்டங்கள், சதுக்கங்கள், வீதிகள், பூந்தோட்டங்கள், நீச்சல் குளங்கள், நீர் ஊற்றுகள், பூப்பாத்திகள், கடற்கரைப் பொழுது போக்குத் தலங்கள், துறைமுகம், விமானத்தளம், பயணர்விடுதிகள் எல்லாம் அமையப்பெற்று ஒன்றுக் கொன்று அழகு செய்வனவாய் விளங்கும். வாழ்க்கை யின் எல்லா வசதிகளும் இடம்பெறும். வயோதிகர்கள் சௌகரியமாக வாழும் பகுதியும் தனியாக அமையும். பூரண கல்வி முறை, அதாவது உடல், உயிர், மனம், உள்ளம், ஆன்மா ஆகிய எல்லா நிலைகளும் இசைபெற இணைந்து வளர்ச்சி பெறுவதற்கான கல்வி அளிக்கப் படும். இதற்கு வேண்டிய பாடத் திட்டங்களும் கல்விச் சாலைகளும் தொலைக்காட்சி கருவிகளும் கணக்கிடும் இயந்திர சாதனங்களும் நிறுவப்படும்.

ஆரோவில் நகர எல்லைக்குள் இப்போது பல கிரா மங்கள் உள்ளன. இக் கிராமவாசிகள்தான் ஆரோவில் நகர முதற் குடிமக்கள் ஆவர். அவர்களெல்லாம் காலப் போக்கில் நகர சமுதாய வாழ்வில் பூரணமாக இணைக்கப் பெறுவர். ஆரம்ப நிலையில் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும், கல்வி, தொழில் வசதிகள் பெறவும் குழந்தைகள் நல்ல பராமரிப்புடன் வளரவும் வேண்டிய வழித்துறைகள் மேற்கொள்ளப்படும். அவர்களும்ஒரே மனித இன லட்சியத்தை ஏற்று நகரில் சமமாக சுதந் தரமாக நல்லெண்ணத்துடன் வாழ்வதற்கு உதவி யளிக்கப் பெறுவர். நகரம் வளருவதில் அவர்கள் எல்லோரும் பங்கு கொள்வதால் அவர்களது வாழ்வு முறைகளும் நிலைகளும் வளர்ந்துமுன்னேறும்.

ஆரோமாடல் என்னும் ஊர் ஆரோவில் நகர வாழ்வுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது. கிராமவாசிக் குடும்பங்கள் சில ஆரோமாடல் இணைப்பு வாழ்வுத் திட்டத்தில் சேர்ந்துள்ளன. அக் குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள் குழந்தைகள் எல்லோருக்கும் அடிப்படை வாழ்க்கை வசதிகள்தர இத்திட்டம் பொறுப்பேற்றுள்ளது. அக்குடும்பத்தினர் உலகத்தின் பல தேசங்களிலிருந்தும், நம் இந்திய நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து தங்கி இங்கு பணியாற்றும் இளைஞர்களுடன் தோளோடு தோள்நின்று நகர அமைப்பின் வளர்ச்சிக்காகவும் இக் கிராமங்களின் உயர்வுக்கும் இடைவிடாது உழைக்கின்றனர். ஆரோமாடல் ஊரில் துவக்கியுள்ள பள்ளியில் தமிழ்தான் முதல்மொழி என ஸ்ரீ அன்னை அறிவித்துள்ளார். இணைப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள கிராமக்குழந்தைகள் மற்றும் தொழிலாளர்களின் குழந்தைகள் ஆசிரமக் குழந்தைகளுடன் சேர்ந்து கல்வி பயில்கிறார்கள். மற்றும் பிரஞ்சு, ஆங்கிலம், சுலப சமஸ்கிருதம் முதலிய மொழிகளும் கற்கிறார்கள். காலப்போக்கில் உலகத்தின் பல மொழிகளை இங்கு யாரும் விரும்பிக் கற்பதற்கு வசதிகள் செய்யப்படும்.

இத்தகைய மகத்தான ஆரோவில் நகரத்தின் மனித குல ஒருமைப்பாட்டு வாழ்வுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் சக்திகளாயிருக்கும் ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை இவர்கள் வாழ்க்கை வரலாறு பற்றியும் செயல்படுத்தப் பட்டுவரும் லட்சியங்கள்பற்றியும் சிறிது தெரிந்து கொள்ளுவோம்.

## ஸ்ரீ அரவிந்தர்

ஸ்ரீ அரவிந்தர் 1872-ம் ஆண்டில் வங்காளத்தில் கல்கத்தா மாநகரில் பிறந்தார். ஆங்கில நாகரீக மோகம் கொண்ட அவருடைய தந்தை ஸ்ரீ அரவிந்தரை ஏழாவது வயதிலேயே அவருடைய இரண்டு மூத்த சகோதரர்களுடன் இங்கிலாந்துக்கு ஆங்கிலப் படிப்புக் காக அனுப்பினார். ஸ்ரீ அரவிந்தர் 14 ஆண்டுகள் இங்கி லாந்தில் படித்து ஆங்கிலம், பிரெஞ்சு, லத்தீன், கிரேக்க மொழி, ஜெர்மன், இத்தாலி ஆகிய பல மொழிகளைச் சிறப்பாகக் கற்றார். ஐ.சி.எஸ். போட்டிப் பரீட்சையில் தேர்ந்தார்; ஆனால் ஐ. சி. எஸ். உத்தி யோகத்தில் பிரியம் இல்லாததால் அப் பரீட்சையில் குதிரைச் சவாரியில் மாத்திரம் தேறக்கருத்தாக இருக்கவில்லை. தம் 11வது வயதிலேயே உலகத்தில் பெரும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படப் போவதையும் தான் அவற்றில் பெரும் பங்குகொள்ள இருப்பதாகவும் உள்ளுணர்ந்தார் அவர். கேம்பிரிட்ஜில் படிக்கும்போதே இந்திய மஜ்லிஜ் என்னும் சங்கத்தின் காரியதரிசியாயிருந்து இந்திய நாட்டின் விடுதலைக் காகப் பல சொற்பொழிவுகள் ஆற்றினார். ஐ.சி.எஸ். உத்தியோகத்திற்கு ஸ்ரீ அரவிந்தர் தகுதி பெற வில்லை என்பதை அறிந்த பரோடாமன்னர் அவரைத் தன் சமஸ்தான உத்தியோகத்தில் சேர்த்துக்கொள்ள தீர்மானித்தார். 14 ஆண்டுகள் கழித்து அரவிந்தர் தாய்நாட்டுக்குத் திரும்பினார். அவர் வரும் கப்பல் கவிழ்ந்ததென ஒரு தவறான தந்திச்செய்தி கிடைத்து அதிர்ச்சியுற்ற அவரது தகப்பனார் மரணமடைந்தார். ஸ்ரீ அரவிந்தர் 21-வது வயதில் தாய்நாடு திரும்பிப்

பம்பாய்த் துறைமுகத்தில் கால் வைத்ததும் தெய்வீகப் பேரமைதி அவரைச் சூழ்ந்தது; பல மாதங்கள் அது நீடித்திருந்தது.

ஸ்ரீ அரவிந்தர் பரோடா சமஸ்தான உத்தியோகத்தில் சேர்ந்து நில வார வரி இலாகாவிலும் மகாராஜாவின் காரியதரிசியாகவும், கடைசியில் பரோடா கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகவும், கல்லூரி உதவித் தலைவராகவும் வேலைபார்த்தார். பரோடா சேவைகளில் 1893 முதல் 1906 வரை 13 வருடங்கள் கழித்தார். பரோடாவில் வந்த பின் தன் தாய்மொழியான வங்காள மொழியையும் மற்றும் சமஸ்கிருதம், குஜராத்தி, மராத்தி ஆகிய இந்திய மொழிகளையும் பிற்காலத்தில் தமிழையும் கற்று இந்திய கலாச்சார நாகரீகம்பற்றி விரிவாகத் தெரிந்து கொண்டார். அவர் பெருவாழ்வு எல்லாவிதங்களிலும் மலர்வதாயிற்று. கவிதைகள் பல இயற்றினர். ஆண்டவனுடைய சாந்நித்தியமும் உணரலானுர். பரோடாவில் வாழ்ந்த முதல்வருடத்தில் வண்டி விபத்து ஒன்று நேரிடும் தருவாயில் ஆண்டவனைப் பிரத்தியட்சமாக உணர்ந்தார்; ஆண்டவனுல் விபத்து தவிர்க்கப்பட்டது. காஷ்மீரில் சங்கராச்சாரியார் மலைமீது ஏறினதும் அகண்ட வெட்டவெளியை உணர்ந்தார். நர்மதா நதிக்கரையிலுள்ள ஒரு காளி கோவிலுக்குச் சிலருடன் சென்றிருந்தபோது காளிதேவி அவருக்கு நேராகக் காட்சி கொடுக்க உணர்ந்தார். இவ்வாருக, யோகம் தவம் ஏதும் பயிலு முன்னரே அவருக்குத் தெய்வீகக் காட்சிகள், உணர்வுகள், அறிவுகள் ஏற்படலாயின.

ஓய்வு நாட்களில் ரகசியமாக முற்போக்கு அரசியலில் ஈடுபடலானர். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அரசியல் உரிமைகளுக்காக மனுப்போட்டு மேன்மேலும் கெஞ்சும் பிற்போக்கான மிதவாதக் கட்சியாக இருந்த அக் காலத்திய காங்கிரஸ் தலைவர்களைக் கண்டித்து அரசியல் கட்டுரைகள் எழுதலானர். புதிய, வேகமுள்ள பொதுஜனத் தொடர்புள்ள தலைவர்கள் தன்னம்பிக்கையுடன், அஞ்சாமையுடன் முன்வரவேண்டும் என எழுதினர். சுதந்திரப் புரட்சித் தலைவராயிருந்த பாலகங்காதர திலகருடன் ஸ்ரீ அரவிந்தர் நெருங்கிய அரசியல் உறவு கொண்டார். 1905ம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கு மக்கள் எதிர்ப்பும் கிளர்ச்சியும் ஏற்பட்டவுடன் பரோடா சமஸ்தான சேவையை உதறித் தள்ளிவிட்டு அரசியலில் நேரடியாகக் கலந்துகொண்டார்.

'வந்தேமாதரம்' என்னும் ஆங்கிலப் பத்திரிகைக்கு தலைமையாசிரியரானர். அரசியல் கருத்துக்கள் வழி துறைகள் பற்றி விரிவாக எழுதலானர். பூரண சுதந்தரம் வெளிப்படையாகக் கோரும் இலட்சியத்தை மக்கள் முன் வைத்தார். மகாத்மாகாந்தி அவர்கள் அரசியலில் புகுவதற்கு முன்பே, அந்நிய நாட்டுச் சரக்குகளை நிராகரித்து சுதேசிப் பொருள்களை ஆதரித்தல், தேசீயத் தொழில்களை ஊக்குவித்தல், சர்க்கார் நீதி மன்றங்களை புறக்கணித்து மக்கள் பஞ்சாயத்துத் தீர்ப்பை நாடுதல், சர்க்கார் பள்ளிகளை புறக்கணித்து தேசீயக்கலாச்சாரம் வளர்க்கும் தேசீயக் கல்லூரிகளை அமைத்தல், தேசீயத் தொண்டர்படை அமைத்து சந்தர்ப்பம் ஏற்படும்போது அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சிசெய்தல், அரசாங்கத்துக்குத் தடையாக ஒத்துழையாமை மூலம் எதிர்ப்புப்

போராட்டம் நடத்துதல் முதலிய அரசியல் நடவடிக்கைத் திட்டங்களையும் கருத்துக்களையும் மக்களிடையே பரப்பலானுர். இறைவனே இந்நாட்டு விடுதலைக்கு தியாகமும் மன உறுதியும் விழிப்பும் வேண்டுகிருர் எனவும், இந்திய நாட்டு விடுதலை உலகத்தின் பொது நலத்திற்கும் மனித குலத்தின் ஒருமைக்கும், உலகை ஆன்மீகத்துறையில் வழி காண்பிப்பதற்கும் அவசிய மான தெனவும் அவ்வாறு ஆண்டவனே வேண்டுகிருர் எனவும் ஆன்மீகம் கலந்த ஆவேசத்துடன் எழுதலானுர். தவிர, அரவிந்தர் அஹிம்சாவாதியல்ல; மக்களின் அறியாமையையும் அசிரத்தையையும் கருதி ஒரு பக்கம் சாத்வீக ஒத்துழையாமை இயக்கம் விடுதலையுணர்வு வளர்ப்பதற்கும், அதேசமயம் இன்ெருரு பக்கம் விடுதலைக்காக பலாத்கார எதிர்ப்புப் போராட்டம் நடத்த ரகசிய இளைஞர் குழுக்களை ஆயத்தப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அரசியலை இறை நோக்குடன் பார்த்தார். இறைவன் அளித்த திட்டமாகக் கருதி செயல்படுத்திஞர்; இந்திய நாட்டை வெறும் நிலம், நீர் மலை வளங்கள் கொண்ட பிரதேசமாகப் பார்க்கவில்லை, உயிர் ததும்பும் பாரத அன்னையாகவே உணர்ந்து வழிபட்டார். கல்கத்தா தேசீயக் கல்லூரிக்கு முதல்வராகி தேசீயக்கல்வி பரப்பவும் முனைந்தார். 1908ம் ஆண்டில் விஷ்ணு பாஸ்கர லெலி என்னும் மராட்டிய மகானிடம் மூன்று நாட்களே யோகம் பயின்று நிர்குணப்பிரம்ம அனுபவத்தை சகஜ அனுபவ மாகப்பெற்று எல்லாக் காரியங்களையும் கவனித்தார்.

ஸ்ரீ அரவிந்தர் எழுதிய எழுத்துக்கள் எல்லாம் மந்திர சக்தி வாய்ந்தனவாய் அமைந்தன. தூங்கி

வழிந்து நெஞ்சில் திடமின்றி செயல்வேகமும் துணிவும் இல்லாது நிலவிய அக்காலத்திய மக்கள் அவற்றைப் படித்து வீரச்செயல்கள் புரியவும், உடல், பொருள் ஆவி ஆகிய தியாகங்கள் செய்யவும் முன்வந்தனர். ஆகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசினர் அலிபூர் சதி வழக்கை ஒரு சாக்காக வைத்து அவரைக் கைது செய்தனர். 'வந்தே மாதரம்' பத்திரிகைமீதும் தடை விதிக்கப் பட்டது. அலிபூர் சிறையில் ஸ்ரீ அரவிந்தர் கீதை, உபநிஷத்து முதலியன படித்து யோகத்திலும் தியா னத்திலும் ஆழ்ந்து சுமார் 1 வருட காலம் கழித்தார். சிறையில் யோகம் முதிர்ந்த நிலையில் பகவான் கண்ணனை எங்கும் எப்போதும் தன்னிலும் எல்லோரிலும் எப்பொருளிலும் கண்டார். சிறைக்கதவுகளிலும் கதவின் கம்பிகளிலும், மரத்திலும் சிறைக் காவலாளியிலும் கொலைக்குற்றவாளிக் கைதிகளிலும் ஒரே இறைவனையே நேராகக் கண்டார். வழக்கு விசாரணைக்காக நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கும் நீதிபதியையும் தனக்காக வாதாடும் வக்கீலையும், எதிர் தரப்பு சர்க்கார் வக்கீலையும் ஆண்டவன் சொரூபமாகவே கண்டு, விசாரணை முடிவுபற்றி கவலைகொள்ளாமலிருந் தார். ஆண்டவன் உணர்த்திய திருவுளப்படியே ஸ்ரீ அரவிந்தர் விடுதலையானார். மறுபடியும் அரசியலில் புகுந்தார். 'கர்மயோகி' 'தர்மா' எனும் பத்திரிகைகளை நடத்தலானார். பல கூட்டங்களில் ஆன்மீகம் கலந்த அரசியல் திட்டங்களைப்பற்றி பேசினார். உத்தரபாரா என்னும் ஊரில் செய்த பிரசங்கத்தில் சிறையில் நிலை யாகப்பெற்ற ஆன்மீக ஞான அனுபவங்களை வெளிப் படுத்தினார். சர்க்கார் அவரை நாடுகடத்த எண்ணியது. அதை அம்பலப்படுத்தி பத்திரிகையில் எழுதினார்.

அவருடைய பத்திரிகை ஆபீஸை சோதனைசெய்து அவரைக் கைது செய்ய வருவதாக ஓர் இரவு திடீர் தகவல் கிடைத்தது. ஆண்டவன் உள்ளுணர்த்தியபடி உடனே தலைமறைவாகச் சந்திர நாகூருக்குச் சென்று ஒருமாதம் கழித்து கல்கத்தா மார்க்கமாக ஒரு *கப்பலில் ஏறிப்புறப்பட்டு பாண்டிச்சேரிக்கு 1910ம்* ஆண்டு ஏப்ரல் 4ந் தேதியன்று வந்துசேர்ந்தார். தமிழ்நாட்டில் புரட்சிவீரர்களாக இருந்த மகாகவி சி. சுப்ரமண்ய பாரதி, சீனிவாசாச்சாரியார் ஆகியோர் அவரை வரவேற்றனர். பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்த பாண்டிச்சேரியில் அடைக்கலம் புகுந்ததும் ஸ்ரீ அரவிந்தர் இறைவன் உள்ளுணர்த்தியபடி அரசியலை விட்டுவிட்டு தவயோக வாழ்வு மேற்கொண்டார். எனினும், நேரடியாக அரசியலில் ஈடுபடாவிட்டாலும், உலகிலும் நாட்டிலும் நடக்கும் எல்லா அரசியல் விவகாரங்களையும் அறிந்து தேவைப்படும்போது தன் அந்தரங்கமான ஆன்மிக சக்தியால் அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தினார். மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் நடந்த சாத்வீக ஒத்துழையாமைப் போராட்டம்மூலம் நாடு சுதந்திரம் அடைவது உறுதி என முன்கூட்டியே உணர்ந்தார். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஒரு கொடிய அசுரனின் ஆதிக்கத்திலிருந்த ஹிட்லர் வெற்றியடையாதபடி, ஸ்ரீ அரவிந்தர் போரின் பல இக்கட்டான கட்டங்களில், உதாரணமாக டங்கர்க்கிலிருந்து பிரிட்டிஷ் படை வாபஸாகும் சமயம், தன் ஆன்மிக சக்திகளை நேச நாடுகளின் வெற்றிக்குப் பயன்படுத்தினார். தவிர, பிரிட்டிஷ் அரசு கொண்டுவந்த "கிரிப்ஸ் திட்டத்தை" ஏற்றுக்கொள்ளும்படி காங்கிரஸ் தலைவர்களை ஒரு அறிக்கை மூலம் கேட்டுக்கொண்டார்.

ஆனால் துரதிஷ்டவசமாக காங்கிரஸ் தலைவர்கள் ஸ்ரீ அரவிந்தரின் யோசனையை நிராகரித்ததால், பிற்காலத்தில் நாடு பிரிவினையுற்று பல துன்பங்களை இன்றளவும் அனுபவித்துக்கொண்டே இருக்கவேண்டியதாயிற்று.

முடிவில், ஸ்ரீ அரவிந்தர் எதிர்பார்த்தபடி, உலகமா யுத்தம் நின்றதும் பலாத்காரமின்றியே நமக்கு சுயராஜ்யம் கிடைத்தது. 15-8-1947 சுதந்திர தினத்தன்று அவர் நாட்டுக்குச் செய்திவிடுத்தார். தன் பிறந்ததினத்தன்று நாடு சுதந்திரம் பெற்றது ஆண்டவனுடைய திருவுளம் என்றும், இனி ஆசிய நாடுகளும் விடுதலை பெற்று மறுமலர்ச்சி அடையுமென்றும், அதற்கு இந்தியா துணைபுரியுமென்றும், இந்திய நாடு எப்போதும் ஒன்ருகவே இருந்துவந்துள்ளதென்றும், ஆகவே தேசப்பிரிவினை தாற்காலிகமாயிருந்து பின் சீக்கிரமாய் எம்முறையிலாவது நாடனைத்தும் ஒன்றுசேருமென்றும் தேசங்கள் தத்தம் தேசீய வாழ்வு உறுதிபெற அமைந்து அதேசமயம், சர்வதேச மனப்பான்மையும் ஐக்கியமும் உலக அரசாங்கமும் ஏற்படும் வழியிற் கூட்டிச்செல்லவும் உலக மக்களை ஆத்மீகத் துறையில் வழிகாட்டவும் இந்தியநாடு மகத்தான சேவைபுரியும் என்றும், எல்லாவற்றிற்கும்மேலாக மனிதகுலம் பூராவும் கூட்டாக உயரிய தெய்வீக உணர்வு நிலைகளில் பரிணமக்கிரமமான வளர்ச்சி (evolution of man into higher consciousness) பெற்று தனிமனிதன் நிறைவாழ்வும், சமூக நிறை வாழ்வும் வாழச் சாத்தியப்படும் என்றும் தாம் உள்ளுணர்ந்தவாறு ஸ்ரீ அரவிந்தர் சுதந்திரதின அறிக்கையில் அன்று அறிவித்துள்ளார்.

மேற்சொன்ன உயரிய தெய்வீக உணர்வுநிலைப் *பரிணும வளர்ச்சியை உலகில் தோற்றுவிப்பதற்காக* அறிவும் ஆற்றலும் (Knowledge-Will) முற்றிலும் இணைந்து தவருமல் செயல்படுகிற சத்திய ஞான உணர்வு (Truth-Consciousness) அல்லது (Supermind) என்னும் தெய்வீக விஞ்ஞானத்தை உலகுக்கு கொண்டு வரவேண்டுமென உணர்ந்து அத்தவமுயற்சியில் 1910ம் ஆண்டு முதலாக ஸ்ரீ அரவிந்தர் ஈடுபட்டார்.

இதே கருத்தும் லட்சியமும் கொண்ட ஸ்ரீ அன்னை பிரான்சு தேசத்திலிருந்து வந்து ஸ்ரீ அரவிந்தரை 1914ல் முதன்முதலாகச் சந்தித்தார். அப்போது அவர் பெயர் மிரா. பிரான்சிலிருக்கும்போது அடிக்கடி தன் அகக் காட்சியில் தோன்றிய மகா புருஷரை கிருஷ்ணன் எனப் பெயரிட்டிருந்தார். அதே மகா புருஷரைத்தான் ஸ்ரீ அரவிந்தராக நேரில்கண்டார். ஸ்ரீ அன்னையின் வேண்டு கோள்படி அவர் உதவியால் ஸ்ரீ அரவிந்தர் 1914ல் ஆர்யா என்னும் தத்துவப் பத்திரிகையை ஆரம்பித்தார். அதில் தனக்கு ஏற்பட்ட உயரிய ஞான அனுபவங்களை யும், தான் மேற்கொண்டுள்ள தெய்வீகப் பணியையும் இன்னும் மனிதகுல ஒருமைப்பாடு, சர்வதேச உறவு நிலை கள், உலக சமஷ்டி அரசாங்கம், பாரத கலாச்சாரம், சமூகம், மதம், நுண்கலைகள் முதலிய விஷயங்கள் பற்றி யும் வேதம், உபநிஷத்துக்கள், கீதை ஆகியவற்றிற்கு விளக்கவுரைகளும் எழுதி சுமார் ஆறரை ஆண்டுகள் பத்திரிகை நடத்தினர். அவர் எழுதிய முக்கிய ஆங்கில நூல்கள்: தெய்வீக வாழ்வு, யோகங்களின் இணைப்பு,

கீதைக் கட்டுரைகள், வேதநூல் என்பவை. சத்தியவான் சாவித்திரி என்னும் புராணக் கதையை தழுவி 'சாவித்திரி' என்னும் பெருங்காவியத்தையும் அருளியிருக்கிருர். மனித குலத்திற்காக மரணத்தை வெல்லவும் திவ்ய விஞ்ஞான உணர்வை உலகிலே கொண்டுவரவும் இவற்றிற்காக உலக மாதாவாகிய ஸ்ரீ அன்னை அகண்ட ஆன்மீக அனுபவத்துடன் செயல்படுவதை மறைவாக சாவித்திரி என்னும் பெயரில் இக் காவியத்தில் தீட்டிக் காண்பிக்கிருர் ஸ்ரீ அரவிந்தர்.

முதல் மகாயுத்தம் 1914ல் குறுக்கிட்டதால் ஸ்ரீ அன்னை பிரான்ஸுக்குத் திரும்பினுர். ஜப்பான் நாட்டில் சிலகாலம் தங்கி, பின் 1920ல் பாண்டிச்சேரிக்கு வந்து நிரந்தரமாக ஸ்ரீ அரவிந்தருடன் தங்கி அவர் ஆற்றிய தவத்திலும் யோகத்திலும் உடனிருந்து துணை புரிந்தார். அன்னை சிறு வயது முதலாகவே தெய்வீக உணர்வு பெற்றவர். அவர் வந்த பின் சீடர்களும் சிறிது சிறிதாகச் சேரவே ஆசிரமம் பேரளவில் உருவாயிற்று. 1926ம் வருடத்தில் திவ்விய விஞ்ஞான உணர்வுக்குச் சற்றே கீழ் நிலையிலுள்ள அதிமானஸ உணர்வு (overmental consciousness) அதாவது கண்ணபிரான் அவதாரத்தின் உணர்வு இவ்வுலகுக்கு இறங்கியது. அதனுல் திவ்விய விஞ்ஞான உணர்வும் (Supramental consciousness) இனி இறங்கும் என்பது நிச்சயமாயிற்று. ஆகவே 1926 முதலாக ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமப் பொறுப்பை அன்னையிடம் கொடுத்துவிட்டு ஆசிரமத்திலேயே தனிமையில் ஒதுங்கி வாழ்ந்து விஞ்ஞான உணர்வைக் கொண்டு வருவதற்குத் தீவிர தவம் மேற்கொண்டார். எனினும் அன்னையின் மூலமாக முக்கிய

காரியங்களைக் கவனித்தும் சிஷ்யர்களுடன் யோக வாழ்வு பற்றிய கடிதப் போக்குவரத்துத் தொடர்பு கொண்டுமிருந்தார். ஆகவே ஸ்ரீ அன்னை ஆசிரமத்தின் பூரா நிர்வாகத்தையும், அதாவது சீடர்களின் புற வாழ்வு மற்றும் யோக வாழ்வுத் தேவைகளையும் கவனித்து வரலானார். இதுசமயம் ஸ்ரீ அரவிந்தர் உலக மாதாவாகிய ஸ்ரீ அன்னையின் தெய்வீகத் தன்மையை விளக்கி 'அன்னை' எனும் நூல் ஒன்று இயற்றினார். அவள் ஆதி பராசக்தியாக விளங்கி மகா சரஸ்வதி, மகா லட்சுமி, மகா காளி, மஹேஸ்வரி ஆகிய ரூபங்களிலும், சேர்ந்து இணைந்த உலக மகா சக்தியாகவும் வெளிப்பட்டு செயல் படுகிறாள். அவள் மானிட வாழ்வு ஏற்று, உலகத்தில் திவ்ய விஞ்ஞான உணர்வு என்னும் சத்திய ஞான உணர்வைக் (Truth-Consciousness) கொண்டு வரு வதற்காகவே தவம் ஆற்றுகிறாள். "அவள் மானுட உடல் எடுத்திருப்பது, இப்பூமியின் ஜட உணர்வு (earth consciousness) விஞ்ஞான உணர்வை ஏற்றுக்கொள்வ தற்கும் அதற்கு வேண்டிய ஆரம்ப உருமாற்றம் (trans-formation) அடைவதை சாத்தியமாக்குவதற்கும், ஒரு அரிய வாய்ப்பாகும்." "நாம் போற்றும் ஸ்ரீ அன்னை எல்லா உலகுகளையும் அரசாளும் தெய்வீக சித்சக்தி யாவாள்." "அவளுடைய உணர்வும் என் உணர்வும் ஒன்றே. ஒரே தெய்வீகப் பேருணர்வு இருவரிலும் செயல் படுவது ஆண்டவன் திருவிளையாடலுக்கு அவசிய மாகிறது." இவ்வாறாக ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னையைப் பற்றி வெளிப்படையாக சாதகர்களுக்கும் சீடர்களுக்கும் அறிவுறுத்தினார்.

ஸ்ரீ அன்னையின் பார்வையில் ஆசிரமம் வளரலாயிற்று. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் உலகின் பல நாடுகளிலிருந்தும் சீடர்கள் வந்து சேர்ந்து யோக வாழ்வு மேற்கொண்டுள்ளனர். புகை, மதுபானம், காமம் போன்றவை விலக்கப்பட்டுள்ளன. உலகமும் உலக வாழ்வும், சமூக வாழ்வும், தனி நபர் வாழ்வும், மற்றும் வாழ்வின் எல்லாத்துறைகளும் தெய்வீகமானவை எனக் கண்டு மனித வாழ்வு பூராவும் தெய்வீகப்படுத்த வேண்டுமென ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையும் இடையறுது முயன்று வந்திருக்கின்றனர். ஆகவே ஆசிரமத்தில் வருடாந்திரப் பரிட்சைகளும் பட்டங்களுமின்றி பாலர் முதல் வயது வந்தவர் வரை உலகியலும் ஆன்மீகமும் இணைந்த புது முறைக் கல்வி கற்பதற்கென கல்விச்சாலைகளும், உடல் உணர்வும் வளர்ச்சியும் பெற உடற்பயிற்சிகளும் விளையாட்டுகளும், கலை உணர்வு வளர்ப்பதற்கு நடனம், சங்கீதம், நாடகம் ஓவியம் சிற்பம் சினிமா போட்டோ படப்பிடிப்பு முதலிய கலைகளும், கலைக்கூடங்களும் காட்சிகளும், பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய வியாபாரங்களும் தொழிற்சாலைகளும் கைத்திறன் தொழில்களும் விவசாயமும் இன்னும் பல மொழிகளில் உலக வாழ்வுடன் இணைந்த யோக ஞானக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பத்திரிகைகளும் அச்சகமும் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பயனுக ஆசிரமவாசிகள், அவரவர்க்கு ஸ்ரீ அன்னை இட்ட வேலைகளைச் செய்து கொண்டே, கர்மம் - பக்தி - ஞானம் இணைந்த பூரண யோக வாழ்வு மேற்கொள்வதற்கும் உடல் - உயிர் - மனம் - ஆன்மா இணைந்த பரிபூரண வளர்ச்சி பெறுவதற்கும் சாத்தியமாகியுள்ளது. பல பெண்மணி

களும் ஆசிரமவாசிகளாயுள்ளனர். இன்று ஆசிரமத்தின் உறுப்பினராக, படிக்கும் மாணவர்கள் உட்பட சுமார் 2000 பேர்கள் இருக்கிருர்கள். ஆகவே இந்த ஆசிரம அமைப்பு புதியதாகவும் எதிர்காலத்தில் தெய்வீக விஞ் ஞானப் பரிணும வாழ்வின் நிறைவுக்கு (Supramental evolution) அடிப்படையாகவும் அமைந்து விளங்குகிற தெனச் சொல்லலாம்.

திவ்ய விஞ்ஞான ஜோதியை உலகுக்கு நேரடியாக கொண்டு வருவதில் ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையும் ஆற்ருெணுத் தவத்தை இடையருது சுமார் 40 வருட காலம் சேர்ந்து இயற்றினர். இருவரும் தம்மளவில் விஞ் ஞான உணர்வை அனுபவமாக அடைந்து அதன் பயனுக தெய்வீக உருமாற்றத்தை (transformation) புத்தி மனம், உள்ளம், பிராணமய இந்திரியங்கள் சூட் சும பூத, உடல் ஆகியவற்றில் ஏற்படுத்தியிருந்தனர். விஞ்ஞான ஜோதியால் ஸ்ரீ அரவிந்தரின் தூல உடம்பும் பொன்னுகத் திகழ்ந்தது எனினும் விஞ்ஞானவுணர்வை உலகளவில் இப்பூமிக்குச் சீக்கிரமாகக் கொண்டுவர அவர் எண்ணினுர். தன் உடலை உருமாற்றம் செய் வதை இரண்டாம் பட்சமாகக் கருதி அதற்கு முக்கியத் துவம் கொடுப்பதை நிறுத்தி விட்டார். உலகளவில் ஜோதியைக் கொண்டு வருவதற்கான அந்த அரிய தவ முயற்சியில் 1950ம் ஆண்டில் சிலநாள் நோயுற்ற தன் உடலைத் தியாகம் செய்தார். எனினும் அவர் எண்ணியபடியே உயிர் துறந்த அதே சமயம் விஞ்ஞான ஜோதி அவருடம்பில் இறங்கி நிரம்பி பூமியை முதன் முதலாகத் தொட்டது. அத்திவ்ய ஜோதி உடலிலிருந்த வரை நான்கு நாட்கள் உடல் கெடாது விளங்கியது.

விஞ்ஞான ஜோதியின் பலத்தால் மீண்டும் உயிர் பெற்று எழும்படி ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை வேண்டிக்கொண்டார். அதற்கு அவர், தான் பின்னொரு சமயம் விஞ்ஞான மய தூல உடல் எடுத்துத் தானுகவே படைத்துத் தோன்றுவதாகவும் இப்பூமி திவ்ய உரு மாற்றம் அடையும் வரை பூமியின் சூழ்நிலையை விட்டுப் பிரியாது இங்கே தங்கித் தன் உணர்வு மூலமும் சக்திகள் மூலமும் சாந்நியத்தின் மூலமும் வழிகாட்டி உணர்த்தி தனக்கு விதிக்கப்பட்ட தெய்வீகப்பணி முடியும்வரை செயலாற்றுவதாகவும் வாக்களித்தார். பின்பு அச்சோதி ஸ்ரீ அன்னையில் புகுந்து நிலைபெற்றது. ஸ்ரீ அரவிந்தரின் உடல் சமாதியில் அடக்கம் செய்யப்பட்டது.

ஸ்ரீ அரவிந்தர் காட்டும் வழியிற் செல்லும் ஸ்ரீ அன்னை 1956ம் ஆண்டில் இவ்வுலகு பூராவுக்கும் திவ்ய விஞ்ஞான ஜோதி அல்லது சத்ய ஜோதியைக் கொண்டு வந்து ஆண்டவன் தனக்கு இட்ட பணியையும் ஸ்ரீ அரவிந்தர் வாக்குறுதியையும் நிறைவேற்றியுள்ளார். 1956 பிப்ரவரி மீ 29ந் தேதியன்று மாலையில் ஸ்ரீ அன்னை கூட்டுத் தியானத்தில் இருந்த சமயம் விஸ்வப் பிரபஞ்சத்தைக் காட்டிலும் பெரியதொரு பொன்னுருவம் எடுத்து இவ்வுலகை ஆண்டவனிடமிருந்து பிரித்து மறைத்து நின்ற பிரமாண்டமான பொன் கதவை எதிர் நோக்கி நின்ருர். "தருணம் வந்து விட்டது" என ஸ்ரீ அரவிந்தரின் குரலை ஆங்கிலத்தில் கேட்டார். உடனே ஒரு பெரிய பொன் சம்மட்டி எடுத்து தன் கரங்களால் ஓங்கி அடித்தார். அக்கதவு சுக்கல் சுக்கலாக நொறுங்கியது. அது முதலாக இடைவிடாது தெய்வீக விஞ்ஞான ஜோதியும் உணர்வும் சக்தியும் (Supramental light, consci-

ousness and force,) சத்திய ஞான உலகிலிருந்து (the world of Truth consciousness ie Supermind) இப்பூமிக்கு நேரடியாக வெள்ளமெனப் பாய்ந்து இறங்கிக் கொண்டிருக்கிறது. திவ்ய விஞ்ஞான ஜோதியை சத்திய ஜோதி என்றும் ஸ்ரீ அரவிந்தர் கூறுவார். ஸ்ரீ அன்னையும் உவகையுடன் பின்வறுமாறு உலகுக்குச் செய்தி விடுத்திருக்கிருர். "இறைவனே நீ உன் திருவுளம் தெரிவித்தாய். நான் நிறைவேற்றுகிறேன் புதியதோர் ஜோதி இப்பூமிக்குப் பாய்ந்து கொண்டிருக்கிறது. புதியதோர் உலகும் பிறந்திருக்கிறது. வாக்களிக்கப்பட்டவை எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன". வாக்களிக்கப்பட்டவை பற்றி ஸ்ரீ அன்னை விளக்கிக்கூறுவதாவது: "சென்ற காலங்களிலும் மகான்கள் புதிய உலகும் புதிய மனித இனமும் வருமென வாக்களித்திருக்கிருர்கள். இவை இன்று நிறைவேற்றப்படுகின்றன."

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து நரை, திரை, பிணி, மூப்பு, மரணம், இவற்றை நீக்கி மரணமிலாப் பேரின்பப் பெருவாழ்வு அளிக்கக் கூடிய தெய்வீக ஜோதி இவ்வுலகுக்கு வருமென்று வாக்கு தந்தார். இந்த ஜோதியை வள்ளலார் ஞானநல் நாடகஜோதி (Light of Knowledge-will) என்றும் சத்திய ஜோதி என்றும் (Truth-Light) சித்ஜோதி என்றும் இன்னருளாம் மெய்ச் சோதி(Truth-Light which has become blissful Grace) என்றும் மெய் சித் அம்பலஜோதி (Light of the world of Truth-consciousness) என்றும் ஞான சிதம்பர ஜோதி என்றும் சச்சிதானந்த ஜோதி என்றும் ஜோதியுட் ஜோதி என்றும் திருச்சிற்றம்பல ஜோதி என்றும் (Light of the

world of divine consciousness திரு சித் அம்பலம்) மெய்த்தெருளாம் ஒளி (அதாவது சத்ய ஞான ஜோதி) என்றும் பொற்சோதி என்றும் பொன்னம்பல ஜோதி என்றும் சிறப்பாக, அருட்பெருஞ்சோதி என்றும் கூறி வந்தார். அரவிந்த ஆசிரமத்து ஸ்ரீ அன்னை அருட் ஜோதியைப்பற்றிக் கூறுகையில் அது திவ்ய விஞ்ஞான சோதியின் ஒரு செயலென்றும் சுவாமிகள் அருட்சோதி யென அழைக்கும் முறையை தான் விசேஷமாக விரும்பு வதாகவும் சமீபத்தில் தெரிவித்திருக்கிருர். ஆகவே வள்ளலார் வாக்களித்த அருட்பெருஞ்சோதி ஆண்டவர் நம் உலகிற்கு வந்து நிலைபெற்று விளங்குகிருர் என நிச்சயமாக அறியலாம்.

எல்லா தத்துவங்களும் ஆன்ம அணுவும் சத்ய ஞானமும் சச்சிதானந்தமும் ஜடத்தில் மறைந்துள்ளன. தத்துவங்களின் பரிணமக் கிரமத்தில் ஜடத்திலிருந்து பிராண உயிரும், உயிரிலிருந்து மனதும், மனதிலிருந்து புத்தியும் படிப்படியாக வெளிப்பட்டுள்ளன. (ஆன்ம அணு மறைவாக பின்னணியில் இருந்து இவைகளை ஊக்குவித்து தானும் வளருகிறது). ஒவ்வொருகட்டத் திலும் கடைசியாக வெளிப்பட்ட ஒரு மேல் தத்துவம் அதற்குக் கீழ்பட்ட தத்துவம் அல்லது தத்துவங்களின் மீது ஆதிக்கம் செலுத்தி தன் மேனிலைத் தன்மைகளை முடிந்தவரை கிரகித்துக் கொள்ளும்படி மாற்றுவதைப் பார்க்கிரோம். இனி புத்தியிலிருந்து திவ்ய விஞ்ஞானம் வெளிப்பட்டு ஆன்மாவின்மூலமும் நேரடியாகவும் புத்தி யையும், மற்றுமுள்ள கீழ்தத்துவங்களை யெல்லாம் தன் தெய்வீகத் தன்மைகளை தவருமற் கொண்டு விளங்கும் படி மாற்றியமைக்கும்; அதாவது உருமாற்றம் (trans-formation) செய்யும்.

திவ்ய விஞ்ஞான ஜோதி வந்ததன் பயனாக புதிய உலகம் நம் காலத்தில் 1956 முதலாகத் தோன்றியுள்ளது. அதாவது புதிய உலக வாழ்வு மலருவதற்கு இச் ஜோதியின் செயல் அடிப்படையாக அமையும். இவ்வுலகின் ஜடத்திலும், ஜடப்பொருள்களிலும் உயிரிலும் உயிர்ப்பொருளான தாவரங்களிலும் கீழ்நிலை இந்திரிய மனம் துளிர்க்கும் உயிரின விலங்குகளிலும், சிந்திக்கும் மனதிலும் மனோ உயிருடல் கொண்ட மனிதனிலும் இச் ஜோதி இனி செயல்பட்டு பரிணாமக் கிரமமான வளர்ச்சியை அமைக்கும் அல்லது வருவிக்கும். அதாவது அவைகள் எல்லாம் தத்தம் இயல்பான உணர்வுகளில் புதியதொரு தெய்வீக ஆக்க சக்தியையும் பொலிவையும் பெற்று புதிய வளர்ச்சியும் முன்னேற்றமும் உருமாற்றமும் அடையும் என்பதாகும்.

இது வெளிப்படையாகத் தெரிவதற்குக் காலம் பிடிக்கலாம். இச் ஜோதியின் செயலால் மனிதனும் இப்போதுள்ள அஞ்ஞான மயமான மனோபுத்தி நிலைகளைக் கடந்து, ஆனால் அதேசமயம் மனது சம்பந்தப்பட்ட தெய்வீகமான பல படிகளில் இயல்பாகவே பரிணாமக் கிரமமாக வளர்ந்து முன்னேறுவான். இப்போது யோகிகளும் ஞானிகளும் யோக பலத்தாலும், சாதனைகளாலும் அடையும் பல பேறுகளை - உதாரணமாக தொலைவிலும், உள்ளிலும் உள்ளவற்றை உள்ளபடி உள்ளுணர்வில் தெளிவாகத் தெற்றென அறிவது, காண்பது, கேட்பது கலைகளும் செயல்களும் விளங்க ஊக்கப்படுவது (intution, vision, hearing and inspiration) அதாவது தெருளறிவு, தெருட்காட்சி, தெருட்கேள்வி, தெருட்கலையூக்கம் முதலியனவும் மற்றும் பிறர்மனோ எண்ணங்களை

அறிவது, உள்ளத்தின் ஆழத்தில் ஆன்மாவின் பலதரப் பட்ட சக்திகளை உணர்வது முதலானவை — இனிவரும் மனிதன் இயல்பாகவே அடைவான்.

வளரும் குழந்தைக்கு உடலுறுப்புகளும் பொறிபுலன் களும் உள்ளமும் மனதும் புத்தியும் அதனதன் உணர்வு களும் அறிவுகளும் சக்திகளும் காலக் கிரமத்தில் இயல் பாகவே வளர்ந்து அவையெல்லாம் மனோபுத்தித் தன்மை களை கிரகித்து மாறுதலடைவதுபோல், இனிவரும் காலத்தில் இத் தெய்வீக ஜோதிஇப்பூமியின் உணர்வில் கலந்து செயல்படுவதால், இப்போதுள்ள மனித இனத்தி லிருந்து புதிய இனம் அதாவது புது இனக் குழந்தைகள் பிறந்து மேற்சொன்ன வகையில் உடல் - உயிர் - மனம் - புத்தி வளர்ச்சியடைவதுடன் நின்றுபோகாமல், அஞ் ஞான நிலைகளிலேயே உழன்று கொண்டிருக்காமல் அவற்றைக்கடந்து மேலும் வளர்ந்து மேனிலையுற்று படிப்படியாக உள்ளத்திலாது புருவ மத்தியிலாவது ஆன்மாவின் கதவுகள் திறக்கப்பெற்று தெய்வீக ஞான சக்திகள் சம்பந்தப்பட்ட மனம் - உயிர் - உடல் நிலைகளை படிப்படியாக இயல்பாகவே அடைவார்கள். இது வரு வது நிச்சயம். ஆனால் அதேசமயம் இப்போதுகூட மனி தன் தவமும் யோகமும் மேற்கொள்ளும் பட்சத்தில் மிக உயரிய தெய்வீக நிலைகளை நிர்குண பிரம்ம நிலை, நிர்குண - சகுண பிரம்ம நிலை, (Overmind), நிர்குண - சித்குண சத்யஞான அனுபவ நிலை (Supermind) முதலி யவைகளை சீக்கிரமாக அடையலாம். பக்குவமுள்ளவர் கள் இச் ஜோதியின் பரிணாமக் கிரமச்செயலால் (evolutionary force of the Light) பிணி, மூப்பு, மரணம் இவற் றையும் வென்று மரணமில்லா நித்ய இன்பவாழ்வை இவ்

வுலகிலே அடைவர். இது ஒருவாறு, ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை இர்வகள் கூறும் பரிணமை மலர்ச்சிபற்றிய விளக்கமாகும்.

சத்திய ஞான உணர்வாலும் ஜோதியாலும் பூரணமாக மனோ பிராண உடல் நிலைகள் உருமாற்றம் செய்யப்பட்டு முடிவில் தூல உடலும் ஒளி நிரம்பி மரணமிலாத் தன்மையை அடையும். மரணமிலாது இஷ்டப்பட்ட காலம் வாழ்ந்து ஆண்டவனுல் விதிக்கப்பட்ட காரியங்களை நிறைவேற்றி முடித்த பின் அத்திவ்ய உடலை பிணி மூப்பு விபத்து முதலிய மரணத்தின் நிர்பந்தங்கள் யாதுமின்றி தானுகவே இங்கே விட்டு ஆன்மா பிரிந்து செல்வதற்குச் சுதந்தரம் உண்டு. தவிர, 1956-ம் வருட முதலாக இச்சோதி இடைவிடாது இறங்கி இச்சட பூமியில் கலந்து புதிய விஞ்ஞானமய பரிணமக் கிரமத்திற்கு (Supramental evolution) அடிப்படையாக செயல் பட்டுக் கொண்டு வருவதால், அப்பரிணமத்தின் மிகத் தொலைவான முடிந்த கட்டங்களில் அல்லது நிலைகளில் மேற் சொன்னவாறு விட்டுச் செல்லும் திவ்ய உடல் கெடாது நிலைக்கக் கூடுமென்பதும் அது தன் தூல தெய்வீக சக்திகளை வெளிப்படுத்திய வண்ணம் பிறரை உடலளவிலும் உருமாற்றம் செய்யக்கூடுமென்பதும் ஒருவாறு ஊகித்து அறிவதற்கு, ஸ்ரீ அரவிந்தர் தம் உடலை விட்டுச் சென்ற தனிச் சிறப்புவாய்ந்த நிகழ்ச்சி இடம் தருகிறது; அதாவது ஸ்ரீ அரவிந்தர் 1950ல் ஆன்மா பிரிந்து உயிர் துறந்த சமயம், உருமாற்றம் ஓரளவு செய்யப்பட்ட அவரது தூல உடலில் சத்ய ஞான ஜோதி இறங்கி வந்து நிரம்பியதால் அச்சோதி இருந்த நான்கு நாட்கள் வரை நோயுற்று மரணமடைந்த அவ்வுடலே

கெடாதபடி நல்ல நிலையில் ஒளியுடன் இருந்தது. ஆனால், ஆன்மா பிரியாது உள்ளொடுங்கிய நிலையில் சமாதியடைந்த சில மகான்களின் உடல்கள் (உயிரற்றதுபோல் நிலைத்து) கெடாது இருக்கின்றன என்னும் நிகழ்ச்சிகளை ஸ்ரீ அரவிந்தரின் சமாதி முறையிலிருந்து வேறுபடுத்தி அறிய வேண்டும்.

இச் ஜோதியின் செயலால் ஸ்ரீ அன்னை தன் முதிய உடம்பை தெய்வீகத்தரமாக மாற்றிவருகிறார். தெய்வீக அழகும் ஒளியும் நிரம்பி, மரணத்தையும் வெல்லக்கூடிய திவ்ய உருமாற்றம் அடைந்து வருகிறார்.

ஆசிரமத்துடன் இணைந்த ஒரு துறையாக ஸ்ரீ அரவிந்தர் செயல் இயக்கம் புதிதாக 1970ல் துவக்கப்பட்டது. இந்த இயக்கம் இந்நாட்டின் கல்வி, பண்பாடு, பொருளாதாரம், அரசியல், சமூக வாழ்வு, தேசீயம், தேசீய ஒற்றுமை முதலான பல துறைகளில் ஏற்பட்டு வரும் பலப்பல பிரச்சினைகளுக்குத் தெய்வீகத்தரமான வழிகளும் செயல்முறைகளும் நாட்டின் குடிமக்களுக்குத் தெரிவித்து வழிகாண்பிப்பதில் பணியாற்றி வருகிறது. இவ்வியக்கத்திற்குப் பின்னால் இருந்து நிறைவேற்றும் ஆக்கசக்தி ஸ்ரீ அரவிந்தரேயாவார். அவருடைய சக்தி இன்றும் என்றும் உலகளவில் செயல்பட்டுக்கொண்டேயிருக்கிறது. அவரது 100வது பிறந்த தின விழா 1972ல் வரும்போது அவர் கருதிய திவ்யமான லட்சியங்கள் உலகளவில் நிறைவேற்றப்பட்டோ அல்லது நிறைவேற்றப்படத் தகுந்த வழிகளில் இயக்கப்பட்டோ அமைவதாகக் காண்கிறோம்.

ஸ்ரீ அன்னை அவரைப்பற்றிக் கூறுகிறார் :

"உலக வரலாற்றில் ஸ்ரீ அரவிந்தர் இடம்பெறுவது ஏதோ ஒரு போதனைக்காகவோ, அல்லது ஒரு தீர்க்க தரிசன உண்மை விளக்கமுற விளக்கியதற்காகவோ அல்ல; பரமனிடமிருந்து நேரிடையாக வரும் ஒரு தீர்மானமான செயலாகவே அவர் அமைந்துள்ளார் என்பதற்காகவேயாம்"

12—5—72

T. R. துளசிராம்